Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM
JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.
Case No. C.C.No. 43/2024

Deposition of witness for Prosecution – P.W. 1 Date : 04.03.2026

| | | | |
|---|---|---|---|
| Name : | செல்வகணேசன் | Village : | புதியமுத்தூர் |
| Father's Name : | நடராஜன் | Taluk : | ஒட்டப்பிடாரம் |
| Age : | 54 | District : | தூத்துக்குடி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of March 2026 **(Accused 1-4 Present. 5th Accused absent, section 355 BNSS petition filed and allowed)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் புதியமுத்தூரில் குடியிருந்து காய்கறி மார்கெட்டில் வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 10.30 மணியளவில் பக்கத்து டீக்கடைக்காரர்களுடன் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இருந்தது. பணம் வாங்கி தருவதாக கூட்டிச் சென்றார்கள். வேறு எந்த பிரச்சனையும் நடந்திடவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ஆனால் அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. (**அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இந்த வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து அனுமதியின் அடிப்படையில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் குற்ற இறுதியறிக்கையில் கண்டுள்ள நாள் தேதி மற்றும் நேரத்தில் வைத்து ஆஜர் எதிரிகள் ஐவரும் என்னிடம் சட்டத்திற்கு புறம்பாக ஒன்றுகூடி கலகம் விளைவித்ததாகவும், அவர்கள் ஐவரும் என்னை கெட்ட வார்த்தையால் திட்டியதாகவும், அதன் தொடர்ச்சியாக எதிரிகள் சரவணன், தில்லை சிதம்பரம் மற்றும் சாமுவேல்ராஜ் என்னை கைளால் அடித்ததாகவும், எதிரிகள் சுமுதகுமார் மற்றும் தர்மலிங்கம் மாப் பைப்பை கொண்டு அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும், பின்னர் எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து என்னை பத்மா ஸ்டீல் பழைய இரும்பு கடையின் குடோனில் நான் வெளியே செல்ல இயலாதவாறு அடைத்து வைத்து எனக்கு கொலை மிரட்டல் கொடுத்துள்ளதாக புகார் கொடுத்து அதனடிப்படையில் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் அது போல் நான் சொல்லவில்லை. மேலே கண்டவாறு தான் சம்பவம் நடைபெற்றது என்றும், தற்போது நாங்கள் சமாதானமாகிவிட்டதால் எதிரிகளை வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் தவறு.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறிவிட்டார்.)

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

S/d.V.Monika
District Munsif Cum Judicial Magistrate
Annur

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM

JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.

Case No. C.C.No. 43/2024

Deposition of witness for Prosecution – P.W. 2 Date : 04.03.2026

| | | | |
|---|---|---|---|
| Name : | திலகவதி | Village : | புதியமுத்தூர் |
| Husband's Name : | செல்வகணேசன் | Taluk : | ஒட்டப்பிடாரம் |
| Age : | 50 | District : | தூத்துக்குடி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of March 2026 **(Accused 1-4 Present. 5th Accused absent, section 355 BNSS petition filed and allowed)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் புதியமுத்தூரில் குடியிருந்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன். சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் என் வீட்டுக்காரருடன் சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள் என்றும், பின்னர் அவரை அவருடன் பேசிக் கொண்டிருந்தவர்கள் அழைத்துச் சென்றதாக எனக்கு பக்கத்தில் உள்ளவர்கள் தகவல் தெரிவித்தனர். நான் இந்த வழக்குச் சம்பவம் எதையும் நேரில் பார்த்திடவில்லை. யார் என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. என் கணவர் சில நாட்கள் மருத்துவமனையில் இருந்தார். அவருக்கு அடிப்பட்டிருந்தது ஆனால் யாரும் அவரை அடித்ததாக சொல்லவில்லை. எப்படி அவருக்கு அடிப்பட்டது என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. இந்த வழக்குச் சம்பவம் பற்றி எதுவும் எனக்கு ஞாபகம் இல்லை. இவ்வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்திடவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறிவிட்டார்.)

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

S/d.V.Monika

District Munsif Cum Judicial Magistrate

Annur